தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்) &
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 094890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-6-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பூவன் வாழையின் விலை நிலையாக இருக்கும்

உலகளவில் 2013.ம் ஆண்டில் வாழை 5.00 மில்லியன் எக்டேரில் பயிரிடப்பட்டு 103.64 மில்லியன் டன் பழங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2013-ல் உலக வாழை உற்பத்தியில் 25.5 சதவீதம் பங்களித்து, 7.76 இலட்சம் எக்டர் பரப்பளவில் இருந்து 265.09 இலட்சம் டன் வாழைப் பழங்கள் உற்பத்தி செய்து இந்தியா முதன்மை இடத்தை வகிக்கிறது.

இந்தியாவில், வாழை உற்பத்தியில் தமிழ்நாடு (19.37 சதவீதம்) முன்னணி வகிக்கிறது. அதாவது 51.36 இலட்சம் டன் வாழை 1.11 இலட்சம் எக்டர் பரப்பளவில் இருந்து 2013 ல் உற்பத்தி செய்யப்பட்டது. இரண்டாம் இடத்தில் குஜராத் (17 சதவீமும்) இதனைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (13.5 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் உள்ளன. வாழை வகைகளில் பூவன் முக்கியமான ஒன்றாகும். குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்ப வளரும் பூவன் வகைகளானது கேரளாவில் பாளையம்கோடான் எனவும் தமிழகத்தில் பூவன் எனவும், ஆந்திரப் பிரதேசத்தில் கற்பூர சக்கரகேலி எனவும், வடகிழக்கு பகுதியில் ஆல்பன் எனவும் பயிரிடப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் முக்கியமாக கோயம்புத்தூர், திருச்சி, தூத்துகுடி, திருநெல்வேலி, கடலூர், விழுப்புரம், ஈரோடு, புதுக்கோட்டை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பூவன் பயிரிடப்படுகிறது.

இது உயரமான மற்றும் வலுவான ரகம் ஆகும். ஒவ்வொரு தாரிலும் 10-12 சீப்புகள் இருக்கும். ஒவ்வொரு சீப்பிலும் 15 முதல் 18 பழங்கள் இருக்கும். ஒரு தார் 180-200 பழங்கள் கொண்டு சராசரி 20-25 கிலோ கொண்டிருக்கும். பூவன் பழங்கள் சற்று அமிலத் தன்மையும் மற்றும் பொதுவான புளிப்பு-இனிப்பு வாசனையும் கொண்டது. பழங்கள் பழுக்கும் போது கவர்ச்சிகரமான தங்க மஞ்சள் நிறம் அடைகிறது.

பூவன் பிப்ரவரி- ஏப்ரல் மற்றும் நவம்பர்- டிசம்பர் ஆகிய மாதங்களில் நடவு செய்யப்படுகிறது. அதிகமான வரத்துக்கள் அக்டோபர் - ஜனவரியிலும், குறைந்த வரத்துக்கள் ஜீன்- ஜீலை மாதங்களிலும் சந்தைக்கு வருகின்றன. வரும் மாதங்களில் அறுவடை விலைகள் பற்றி விவசாயிகள் அறிந்து செயல்பட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு பின்புல மையம் கோயம்புத்தூர், இரத்தின சபாபதிபுரம் உழவர் சந்தையில் 6 வருடங்களாக நிலவிய பூவன் விலைகளை ஆராய்ந்தது.

தற்போது சந்தை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.18 - 20 ஆகும். இதன்படி கோயம்புத்தூர் உழவர் சந்தையில் பூவன் பழங்களுக்கு 2014 ஜீன்- ஜீலை மாதத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ19 ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே விவசாயிகள் பூவன் வாழையை மேற்கண்ட மாதங்களில் விற்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

பேராசிரியர் மற்றும் தலைவர்
பழ பயிர்கள் துறை,
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611269

மக்கள் தொடர்பு அலுவலர்